01-04-2019 OS. No.20/2012 *.வா.சா.1 அய்யம்மாள்*

*குறுக்கு விசாரணை-(14ம் பிரதிவாதி தரப்பில்)*

*நான் இந்த வழக்கை பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1, 2, 3வது அயிட்டத்தில் மொத்தம் எத்தனை சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்டுள்ளேன் என்று ஞாபகம் இல்லை. 3வது அயிட்ட சொத்து பாண்டவர் மங்கலத்தில் உள்ளது. 3வது அயிட்ட சொத்தின் சர்வே எண், அதன் விஸ்தீரணம் என்ன என்று எனக்கு தெரியாது. 3வது அயிட்ட சொத்து ஆதியில் என் தாத்தா ஐய்யப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டதாகும். 3வது அயிட்ட சொத்து என் தாத்தா ஐய்யப்ப நாயக்கருக்கு பாத்தியம் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 14/05/1960ல் என் தாத்தா எழுதி வைத்த உயில் ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. என் தாத்தா ஐய்யப்ப நாயக்கரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் இந்த வழக்கில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எத்தனை ஆவணங்கள் என்று ஞாபகம் இல்லை. என் தாத்தா இறந்தபிறகு அவரின் 3 பெண் வாரிசுகள் அனுபவம் செய்து வந்தார்கள் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் அம்மா அனுபவம் செய்வதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தபசில் சொத்தை பொறுத்து எங்கள் தாத்தா எழுதிவைத்த உயில் ஆவணம் என்னிடம் இல்லை.*

*குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது*

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென*

ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)A.K.பாபுலால்,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.